**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான எஎஎ சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**முன்னிலை–திரு. சு. ஜெயசிங், B.Com., B.L.,**
**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை.**

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.29/2023**
**(CNR No.TNSA25-000420-2024)**

| | | |
|---|---|---|
| **குற்றமுறையிடுபவர்** | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆணையாளர்,<br>கொண்டலாம்பட்டி சரகம், சேலம் மாநகரம்.<br>இரும்பாலை காவல் நிலையம்,<br>குற்ற எண்.27/2023 |
| **எதிரிகளின் பெயர்** | : | 1. மாணிக்கம் (58/2023)<br>த/பெ. தங்கவேல்<br>3/1-B சித்தர்கோவில் மெயின்ரோடு,<br>திருமலைகிரி, சேலம்.<br>2. வெங்கடாசலம் (50/2023),<br>த/பெ. அர்ஜுனன்,<br>258, அம்மன் கோவில் வட்டம்,<br>வேடுகாத்தாம்பட்டி, திருமலைகிரி, சேலம்.<br>3. அர்ஜுனன்(எ) கூலைகவுண்டர் (77/2023),<br>த/பெ. கந்தசாமி . **(இறந்து விட்டார்).**<br>25B, வயக்காடு, வேடுகாத்தாம்பட்டி,<br>திருமலைகிரி, சேலம் |

| S.No | CASE SUMMARY | | | |
|---|---|---|---|---|
| i. | The period of remand of the Accused | A1 – 30.1.2023 to 06.02.2023<br>A2 – 23.02.2023<br>A3 – 23.02.2023 | | |
| ii. | The date of filing of the complaint / final report in the Court | 02.06.2023 | | |
| iii. | The date of committal of the case to the Court of Session | -- | | |
| iv. | The date of questioning of A1 to A4 U/s- 228, 240, 246 and 251 CrPC as the case may be | U/s 228 of CrPC –19.08.2024 | | |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/s 317 of code | **CMP No.** | **Section / Prayer** | **Result** |
| | | CMP 377/2023 of Principal Sessions Court, Salem. | Bail U/s 439 of CrPC filed by A1 | Allowed on 06.02.2021 |
| | | CMP 547/2023 & CMP 548/2023 of of Principal Sessions Court, Salem. | Bail U/s 439 of CrPC filed by A2 & A3 | Allowed on 23.02.2021 |
| | | CMP.No. 546/2023 of Principal Sessions Court, Salem. | Surrender petition filed by A2 & A3 | Surrender of A2& A3 Accepted on 23.02.2023 |
| | | Crl.O.P.No2779/ 2023 of Hon'ble High Court of Madras. | Petition U/s.482 of CrPC filed by A2&A3 for direction | Allowed on 09.02.2023 |
| vi. | Date of examination in-chief and cross-examination of a witness | **Name of the Witnesses** | **Date of Chief Examination** | **Date of Cross Examination** |
| | | PW1 Praveenkumar | 22.10.2025 | 22.10.2025<br>by Prosecution & defense. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW2 Vijay | 22.10.2025 | 22.10.2025 by Prosecution & defense. |
| | | PW3 Palanisamy | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW4 Parthiban | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW5 Manikandan | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW6 Palraj | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW7 Sankar | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW8 Annamalai | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW9 Vijayakumar | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW10 Raja | 07.11.2025 | 07.11.2025 by Prosecution |
| | | PW11 Arulprakash | 19.02.2026 | 19.02.2026 |
| | | PW12 Srinivasan | 19.02.2026 | 19.02.2026 |
| | | PW10 Anandhi | 17.03.2026 | 17.03.2026 |
| Vii. | Date of examination of the Accused under Section 313 of Code | 18.03.2026 | | |
| Viii. | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be | -- | | |
| ix. | Grant of stay by superior Courts and the results thereof | NIL | | |

| | |
|---|---|
| முதலாவது குற்றச்சாட்டு | 2 வது எதிரி மீது –பொதுமக்களுக்கான வழிபாட்டு தலத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவரை மறித்தல்– பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3 (1) (za)(C)ன் படி |
| இரண்டாவது குற்றச்சாட்டு | 1 மற்றும் 2 எதிரிகள் மீது – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பொது பார்வையில் சாதி பெயரை சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி இழிவு படுத்துதல் – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r),(s)ன் படி |
| மூன்றாவது குற்றச்சாட்டு | 1 மற்றும் 2 எதிரிகள் மீது –கொலை மிரட்டல் விடுத்தல் – இதச 506(1)ன் படி |
| நான்காவது குற்றச்சாட்டு | 1 மற்றும் 2 எதிரிகள் மீது – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பட்டியலில் கண்ட இதச பிரிவுகள் படியான குற்றங்களை செய்தல் – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3 (2) (va)ன் படி |
| 1 மற்றும் 2 எதிரிகளின் பதில் (3ஆம் எதிரி இறந்து விட்டார்) | பொய் வழக்கு |
| நீதிபதியின் தீர்மானம் | 1வது எதிரி மீதான இதச 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)ன் கீழ், 2ஆம் எதிரி மீதான 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் |

| | |
|---|---|
| | தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(1)(za) (C ), 3(2)(va)ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை. |
| தண்டனை (அ) உத்தரவு | 3வது எதிரி இறந்து விட்டார். எனவே அவருக்கு எதிரான வழக்கு அற்று போய் விட்டது.<br>1வது எதிரி மீதான இதச 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)ன் கீழ், 2ஆம் எதிரி மீதான 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(1)(za) (C ), 3(2)(va)ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற சி.பி எண். 14/2023ல் உள்ள |

| | |
|---|---|
| | வழக்கு சொத்தான –Data Right Plus குறுந்தகடை இவ்வழக்கின் சான்றாவணங்கள் உடன் இணைத்து வைக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 18.03.2026 அன்று முடிவான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, குற்றமுறையீடுபவரான அரசுக்காக திரு.S. இசைஅமுதன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J.கோபிநாத்,. அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், அரசு தரப்பில் முன்னிடப்பட்ட ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி சரகம் காவல் உதவி ஆணையாளர் தாக்கல் செய்த வழக்கின் சுருக்கம்**:–

இவ்வழக்கின் புகார்தாரர் பிரவீன்குமார் த/பெ.செந்தில் என்பவர் இந்து ஆதிதிராவிடர் எனும் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் சேலம், திருமலைகிரி, ஆதிதிராவிடர் தெரு என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அந்த கிராமத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற திருவிழாவை முன்னிட்டு, 25.01.2023ஆம் தேதி

இரவு 8.30 மணியளவில் வாதியானவர் கோவிலுக்குள் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்த போது, வெளியே உட்காந்திருந்த 2 மற்றும் 3ஆம் எதிரிகள் வாதியை பார்த்து ஏன் கோவிலுக்குள் சென்றாய், நீங்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்று மிரட்டி அடிக்க வந்துள்ளார், இந்நிலையில் கடந்த 27.01.2023ஆம் தேதி காலை 8.30 மணியளவில், சிலபேர் வந்து, 1ஆம் எதிரி வாதியை மாரியம்மன் கோவில் அருகே வருமாறு அழைத்தன் பேரில் வாதி அங்கு சென்ற போது, அங்கு 1முதல் 3 எதிரிகள் மற்றும் சிலபேர் வாதியை பார்த்து "ஏண்டா, கண்டாரஓழி, தேவடியா பையனே, உன்னை யாருடா கோவிலுக்குள் போகச் சொன்னது, மேளம் அடிக்கும் நாய்கள், நீங்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்று எத்தனைமுறை சொல்வது " என்று கெட்ட வார்த்தையால் திட்டி, வாதியை தாக்கியுள்ளனர். பின்னிட்டு 2ஆம் எதிரி வாதியை பார்த்து "இந்த கீழ் சாதி தேவடியா பையன் கிட்ட, நானே வரக்கூடாது என்று கூறியும், மீண்டும் திமிராக கோவிலுக்குள் வருகிறான்" என்று கெட்ட வார்த்தையால் திட்டி கொன்று விடுவதாக மிரட்டியுள்ளார். எனவே எதிரிகள் அனைவரும் இதச 296(பி), 506(1)ன் கீழ், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1) (r), 3(1)(s), & 3(1)(za)(C) ன்

கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கையை கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளர் சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கையானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, மேற்படி வழக்காவணங்களை பரிசீலனை செய்து, மேற்படி வழக்கானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் Spl.SC.No.29/2023 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1 முதல் 3 எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் படிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், 3ஆம் எதிரி இறந்து விட்டதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய் விட்டதாக முடிவு செய்து பதிவு செய்யப்பட்டது.

4. மேலும், வன்கொடுமை தடுப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்ட காரணத்தினால், மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம்

செய்யப்பட்டு, Spl.SC.No.29/2023 என அதே எண்ணில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுள்ளது.

5. 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர், அரசு தரப்பினர், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பினர் இரு சாராருக்கும் அளிக்க வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் 1, 2 எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று கருதவும், கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகளை செயலாற்றவும், வழிவகுப்பனவாக இருந்தமையால் 1வது எதிரி மீது இதச பிரிவு 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)ன் கீழும், 2ஆம் எதிரி மீது இதச பிரிவு 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(1)(za) (C ), 3(2)(va)ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவ, 1 மற்றும் 2ஆம் எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என குற்றத்தையும் குற்றச்சாட்டையும் மறுத்து விசாரணை வேண்டினர்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரிசை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

அ.சா.1 பிரவீன்குமார் தனது சாட்சியத்தில்தான் இந்து ஆதிதிராவிடர் என்ற பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்றும், 1, 2 எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தன் ஊரை சார்ந்தவர்கள் என்றும், 2023ஆம் வருடத்தில் ஒரு நாள் தங்கள் ஊர் கோவில் விசேஷத்திற்கு நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி கோரி இரும்பாலை காவல் நிலையத்திற்கு தான் சென்றிருந்த போது, அங்கிருந்த போலீசார் தன்னிடம் தற்போது காட்டப்படும் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவில் உள்ள கையொப்பத்தை மட்டும் பெற்றுக் கொண்டார்கள் என்றும், அந்த புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என தனக்கு தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அசா2 விஜய் தனது சாட்சியத்தில் தான் திருமலைகிரியில் குடியிருந்து அங்குள்ள பெரிய மாரியம்மன் கோவில் பூசாரியாகவும் மர ஆசாரியாகவும் வேலை செய்து வருவதாகவும், தான் பண்டாரம் என்ற சமூகத்தை சார்ந்தவர் என்றும், அ.சா.1 பிரவீன்குமார் என்பவரை தெரியும் என்றும், அவர் தங்கள் ஊர்காரரர் என்றும், அவர் தங்கள் ஊர் பெரிய மாரியம்மன் கோவிலுக்கு வந்து செல்வதுண்டு என்றும், 1, 2 எதிரிகளை தெரியும் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அசா3 பழனிசாமி தனது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன்குமார் என்பவரை தனக்கு தெரியாது என்றும், 1, 2 எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. அசா4 பார்த்திபன் அவரது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன்குமார் என்பவரை தனக்கு தெரியாது என்றும், 1, 2 எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. அசா5 மணிகண்டன் அவரது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன்குமார் என்பவரை தனக்கு தெரியாது என்றும், 1, 2 எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அசா6 பால்ராஜ் அவரது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன் குமாரை தெரியும் என்றும், 1, 2 எதிரிகளை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றும், இரும்பாலை காவல் நிலையத்தில் வைத்து வரைபடம் போட வேண்டும் என்று சொல்லி போலீசார் தன்னிடம் இந்த கையொப்பத்தை பெற்றுக் கொண்டார்கள் என்றும், அதில் என்ன எழுதி உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அசா7 சங்கர் தனது சாட்சியத்தில் தான் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், அ.சா.1 பிரவீன்குமாரை தெரியும் என்றும், 1, 2 எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு

எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தை எங்கு வைத்து போட்டு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை என்றும், பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அசா8 அண்ணாமலை அவரது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன்குமார் என்பவரை தனக்கு தெரியாது என்றும், 1, 2 எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. அசா9 விஜயகுமார் அவரது சாட்சியத்தில் தான் இந்து குலாளாளர் சமூகத்தை சார்ந்தவர் என்றும், அ.சா.1 பிரவீன்குமாரை தனக்கு தெரியாது என்றும், 1, 2 எதிரிகளை தெரியும் என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16. அசா10 ராஜா அவரது சாட்சியத்தில் அ.சா.1 பிரவீன்குமார் மற்றும் 1, 2 எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17. அசா11 அருள்பிரகாஷ் அவரது சாட்சியத்தில் கடந்த 2023 ஆம் வருடம் சேலம் மேற்கு வருவாய் வட்டாட்சியராக பணியிலிருந்த போது இரும்பாலை காவல் நிலைய குற்ற எண்.27/2023 SC and ST வழக்கின் வாதி பிரவீன்குமார் என்பவருக்கு சாதி சான்றிதழ் கோரி கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளர் அவர்கள்கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று. மேற்கண்ட நபர் குறித்து திருமலைகிரி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திருமலைகிரி வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று மேற்கண்ட வாதி பிரவீன்குமார் இந்து ஆதிதிராவிடர் என்ற பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்று அ.த.சா.ஆ.4 – சாதி சான்றிதழ் வழங்கியதாகவும், அது சம்மந்தமாக காவல் உதவி ஆணையாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18. அசா12 ஸ்ரீனிவாசன் அவரது சாட்சியத்தில் கடந்த 30.01.2023 தேதி பகல் 15.00 மணிக்கு சேலம் மாநகரம் இரும்பாலை காவல்

நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, சேலம் திருமலைகிரி ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த செந்தில் என்பவர் மகன் பிரவீன்குமார் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்ட அ.த.சா.ஆ.5– புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப இரும்பாலை காவல் நிலைய குற்ற எண்.27/2023 சட்டப்பிரிவுகள் 3 (1)(r), 3(1)(s), 3(1)(za)(c) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டம் மற்றும் 3(a) PCR Act உ/இ 294( b), 506(1) இதச ஆக அ.த.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி, மற்ற முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். இந்த வழக்கு SC/ST வழக்கு என்பதால் இவ்வழக்கை புலன் விசாரணை செய்ய அதிகாரியை நியமனம் செய்ய வேண்டி சேலம் மாநகரம் வடக்கு சரகம் துணை ஆணையாளர் ஆக பொறுப்பிலிருந்த சேலம் மாநகரம் தெற்கு சரகம் துணை ஆணையாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை நகலுடன்

வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்ததாகவும், இது குறித்து காவல் உதவி ஆணையாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

19. அசா13 ஆனந்தி அவரது சாட்சியத்தில் கடந்த 30.01.2023 தேதி சேலம் மாநகரம், கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளராகதான் பணியிலிருந்த போது சேலம் மாநகரம் தெற்கு துணை காவல் ஆணையாளராக பொறுப்பிலிருந்த சேலம் வடக்கு காவல் துணை ஆணையாளர் அவர்கள் பிறப்பித்த C.No.02/SC&ST Act/DCP–South/SLM(C)/2023 dated 30.01.2023 படியான அ.த.சா.ஆ.7– செயல்முறை ஆணைப்படி இரும்பாலை காவல் நிலைய குற்ற எண்.27/2023 சட்டப்பிரிவுகள் 294(b), 506(1) இதச மற்றும் 3 (a), Protection of Civil Rights Act 1955 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(1)(za)(C) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டப்படியான வழக்கைதான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடமான திருமலைகிரி பெரிய மாரியம்மன் கோவில் அருகில் சென்று சம்பவ இடத்தை 17.30 மணியளவில் சாட்சிகள் பால்ராஜ், சங்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.த.சா.ஆ.8.– பார்வை மகஜர் மற்றும்

அ.த.சா.ஆ.9–மாதிரி வரைபடம் தயாரித்ததாகவும், பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

20. அசா13 காவல் உதவி ஆணையாளர் ஆனந்தி அவரது சாட்சியத்தில் புகார்தாரர் பிரவீன்குமார் மற்றும் சாட்சிகள் விஜய், பழனிசாமி, கோவிந்தன் ஆசாரி, பார்த்திபன், மணிகண்டன், பால்ராஜ், சங்கர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மேற்கண்ட சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி சென்ற போது, வழக்கின் 1வது எதிரி மாணிக்கம் என்பவர் செம்மண்திட்டு பேருந்து நிறுத்தம் அருகில் நின்று இருந்தவரை தகவலாளி அடையாளம் காட்ட கைதுக்கான காரணம் கூறி எதிரியை கைது செய்தும் காவல் நிலையம் அழைத்து சென்று கைது நடைமுறைகளை முறையாக பின்பற்றியும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு புலன்விசாரணையில் சாட்சிகள் அண்ணாமலை, விஜயகுமார், ராஜா, சரவணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் எதிரிகள் மற்றும் புகார்தாரருக்கு சாதி சான்றிதழ் வழங்கும்படி சேலம் மேற்கு வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம்

அனுப்பி வைத்ததாகவும், சேலம் வட்டாட்சியர் அருள்பிரகாஷ் என்பவர் 31.03.2023 தேதி வழங்கிய வாதி பிரவீன்குமார் என்பவரின் சாதி சான்றிதழை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

21. அசா13 ஆனந்தி அவரது சாட்சியத்தில் 1வது எதிரி மாணிக்கம், 2வது எதிரி வெங்கடாசலம், பின்னிட்டு இறந்து போன 3வது எதிரி அர்ஜுனன் என்ற கூளகவுண்டர் ஆகியோரின் சாதி சான்றிதழ்களை 31.03.2023 தேதி வழங்கிய சேலம் மேற்கு மண்டல துணை வட்டாட்சியர் மனோகரன் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 1, 2, 3 எதிரிகள் இந்து வன்னியர் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்று சாதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும், 1வது எதிரி மாணிக்கம், 2வது எதிரி வெங்கடாசலம், பின்னிட்டு இறந்து போன 3வது எதிரி அர்ஜுனன் என்ற கூளகவுண்டர் ஆகியோரின் சாதி சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.10 வரிசை என்றும், பிறகு சாட்சி வெற்றிவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாகவும், பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல் உதவி ஆய்வாளர் ஸ்ரீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தன்னுடைய புலன்விசாரணையின் அடிப்படையில்

இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 3 (a), Protection of Civil Rights Act 1955 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(1)(za)(C) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் 294(b), 506(1) இதச சட்டப்பிரிவுகளிலிருந்து 294(b), 506(1) இதச, 3(1)(r), 3(1)(s), 3(1)(za)(C), 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் 3 (a), Protection of Civil Rights Act 1955 சட்டப்படி 25.04.2023 தேதியில் மாற்றம் செய்து அ.த.சா.ஆ.11 –சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அத்துடன் புலன்விசாரணை முடித்து 1, 2, 3 எதிரிகளுக்கு எதிராக 294(b), 506(1) இதச, 3(1)(r), 3(1)(s), 3(1)(za)(C), 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் 3 (a), Protection of Civil Rights Act 1955 சட்டப்படியான இறுதி அறிக்கையை 25.04.2023 தேதியில் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும், சாட்சிகள் தன்னிடம் சொன்னதை தான் வாக்குமூலங்களாக பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

22. அசா1 முதல் அசா 10 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்

பேரில் அனுமதி வழங்கப்பட்டது. அசா13–ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

23. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் படி 1 மற்றும் 2 எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது, 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் என்று கூறியதாகவும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் ஏதும் இல்லை என்று கூறியதால் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

24. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

25. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**26. தீர்வு:–**

இவ்வழக்கானது 30.01.2023ஆம் தேதி, பகல் 3 மணியளவில் இரும்பாலை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த

அ.சா.12 ஸ்ரீனிவாசன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது, அசா1 பிரவின்குமார் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.த.சா.ஆ.5–புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப இரும்பாலை காவல் நிலைய குற்ற எண்.27/2023 சட்டப்பிரிவுகள் 3 (1)(r), 3(1)(s), 3(1)(za)(c) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டம் மற்றும் 3(a) PCR Act உ/இ 294( b), 506(1) இதச சட்டப்படி பதிவு செய்த அ.த.சா.ஆ.6 –முதல் தகவல் அறிக்கைபடி துவங்கியுள்ளது.

27. கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் வாதியான அ.சா.1 பிரவின்குமார், சம்பவ சாட்சிகளான அசா2 முதல் அசா5, அசா8 முதல் அசா10 ஆகியோரும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சம்மந்தமான சாட்சிகளான அ.சா.6 மற்றும் அசா7 ஆகியோரும் பிறழ்சாட்சிகளாக மாறி இருப்பினும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.12 ஸ்ரீனிவாசன் மற்றும் புலனாய்வு அலுவலரான கொண்டலாம்பட்டி சரக காவல் உதவி ஆணையாளர் அ.சா.13 ஆனந்தி ஆகியோரின் சாட்சியம் 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1 பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதும் 1 முதல் 3

எதிரிகள் பட்டியல் இனம் அல்லாத சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதும் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும் எனவே 1 மற்றும் 2 எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

28. 1 மற்றும் 2 எதிரிகள் எந்த குற்றமும் புரியவில்லை என்றும் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டிற்கு உரிய ஆதாரம் இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.12 மற்றும் புலனாய்வு அலுவலர் அ.சா.13 ஆகியோரின் சாட்சியத்தை மட்டும் கருத்தில் கொண்டு 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிக்குவர இயலாது என்றும் எனவே 1 மற்றும் 2 எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

29. இவ்வழக்கின் வாதியான அ.சா.1 பிரவின்குமார், இந்து ஆதிதிராவிடர் எனும் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பது சேலம் மேற்கு வருவாய் வட்டாட்சியர் வழங்கிய அ.த.சா.ஆ.4– ஜாதி சான்றிதழ் மூலமும் 1 முதல் 3 எதிரிகள், பட்டியல் இனம் அல்லது பழங்குடி இனம் அல்லாத வகுப்பை சார்ந்தவர்கள் என்பது சேலம் மேற்கு மண்டல துணை

வட்டாட்சியர் வழங்கியுள்ள அ.த.சா.ஆ.10 வரிசை சாதி சான்றிதழ்கள் மூலமும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

30. இவ்வழக்கில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 பிரவின்குமார் என்ற நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சம்பவ சாட்சிகள் அ.சா.2 முதல் அ.சா.5 மற்றும் அ.சா.8 முதல் அசா10 ஆகியோரும் சம்பவ இடத்தை புலனாய்வு அலுவலர் அ.சா.13 பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்த போது உடனிருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பமிட்ட அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோரும் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டார்கள். மேற்படி பிறழ்சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அரசு தரப்புக்கு ஆதரவாக எடுத்துக் கொள்ள ஏதும் இல்லை.

31. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.12 ஸ்ரீனிவாசன் என்ற காவல் உதவி ஆய்வாளரின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு எதிரான குற்றம் குறித்து ஏதும் தெரியவரவில்லை. அவருடைய சாட்சியத்திலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து நிரூபிக்கத்தக்க ஆதாரம் ஏதும் இல்லை.

32. இவ்வழக்கில் எஞ்சியிருக்கும் சாட்சியான அ.சா.13 ஆனந்தி என்ற புலனாய்வு அலுவலர் அரசு தரப்பு வழக்கு குறித்து விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.5 மற்றும் அ.சா.8 முதல் அ.சா.10 ஆகியோரும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்படும் போது புலனாய்வு அலுவலர் அ.சா.13 ஆனந்தி என்பவருடன் இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டு கொடுத்தது குறித்து விசாரிக்கப்பட்ட அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகிய சாட்சிகளும் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்ட நிலையில் புலனாய்வு அலுவலர் அ.சா.13ன் சாட்சியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் என்று முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

33. முடிவில், 3வது எதிரி இறந்து விட்டார். எனவே அவருக்கு எதிரான வழக்கு அற்று போய் விட்டது. 1வது எதிரி மீதான இதச 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)ன் கீழ், 2ஆம் எதிரி மீதான 506(1)ன் கீழ் மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(1)(za) (C ), 3(2) (va)ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்கி 1 மற்றும் 2 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற சி.பி எண். 14/2023ல் உள்ள வழக்கு சொத்தான –Data Right Plus குறுந்தகடை இவ்வழக்கின் சான்றாவணங்களுடன் இணைத்து வைக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 24ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.03.24 16:10:23 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**பின் இணைப்பு –**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| சாட்சி எண் | சாட்சிகளின் பெயர் விவரம் | சாட்சிய விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | பிரவின்குமார் | வாதி/ பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.2 | விஜய் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | பழனிசாமி | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | பார்த்திபன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | மணிகண்டன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | பால்ராஜ் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | சங்கர் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | அண்ணாமலை | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.9 | விஜய்குமார் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.10 | ராஜா | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.11 | அருள்பிரகாஷ் | அசா1க்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் |
| அ.சா.12 | ஸ்ரீனிவாசன் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |

| | | |
|---|---|---|
| அ.சா.13 | ஆனந்தி | வழக்கை புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை சமர்ப்பித்த புலன்விசாரணை அலுவலரான காவல் துணை கண்காணிப்பாளர். |

**அரசு தரப்புச் சான்றாவணங்கள்–**

| சான்றாவணங்–களின் எண். | சான்றாவணங்களின் விவரம் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள அசா1ன் கையொப்பம், நாள் 30.01.2023. | அ.சா–1 |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அசா6ன் கையொப்பம், நாள் 30.01.2023 | அ.சா–6 |
| அ.த.சா.ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள அசா7ன் கையொப்பம், நாள் 30.01.2023 | அ.சா–7 |
| அ.த.சா.ஆ.4 | அசா1 சம்மந்தமாக அசா11 வழங்கிய சாதிச்சான்றிதழ், நாள் 30.01.2023 | அ.சா–11 |
| அ.த.சா.ஆ.5 | புகார் மனு, நாள் 30.01.2023. | அ.சா–12 |
| அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை, நாள் 30.01.2023 | அ.சா–12 |
| அ.த.சா.ஆ.7 | சேலம் வடக்கு காவல் துணை ஆணையாளர் அவர்கள் பிறப்பித்த செயல்முறை ஆணை, நாள் 30.01.2023 | அ.சா–13 |
| அ.த.சா.ஆ.8 | பார்வை மகஜர், நாள் 30.01.2023 | அ.சா–13 |
| அ.த.சா.ஆ.9 | மாதிரி வரைபடம், நாள் 30.01.2023 | அ.சா–13 |
| அ.த.சா.ஆ.10 வரிசை | 1 முதல் 3 எதிரிகள் சம்மந்தமான சாதிச்சான்றிதழ், நாள் 31.03.2023 | அ.சா–13 |
| அ.த.சா.ஆ.11 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை, நாள் 25.04.2023 | அ.சா–13 |

**<u>அரசு தரப்புச் சான்றுப் பொருள்–</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்</u>**–இல்லை

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.03.24 16:10:31 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்**
**(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான**
**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**